## தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009

**இணைப்பு: 12**

**பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு** (பிறந்த திகதி: 01.07.1999 - 30.06.2001)

# மன உறுதி

ஒவ்வொரு மனிதனுக்கும் மன உறுதி அவசியம். உறுதியான மனமும், இனிமையான வாக்கையும் தந்து அருளல் வேண்டும் என்று சக்தியை வேண்டினான் பாரதி. எமது சிந்தனையிலும், செயலிலும் எமக்கு நம்பிக்கை இல்லாத போது எம் மன உறுதி தளர்கிறது. அதனால் எமது செயல்களைச் சரிவரச் செய்ய முடியாது போகிறது. அதன் விளைவாகப் பலவிதமான இன்னல்களுக்கு நாம் ஆளாக நேரிடுகிறது.

குழந்தைகளால் பல மொழிகளை ஒரே நேரத்தில் பயில முடியும் என்பது விஞ்ஞான முடிபு. தமிழ் மொழிப் புலமையைக் குழந்தைகளுக்கு வளர்க்கவேண்டியது பெற்றோரின் கடமையாகும். அந்தக் கடமையை ஒவ்வொரு பெற்றோரும் உணரவேண்டும்.

திரும்பத் திரும்ப ஒரு சொல்லைச் சொல்வதால் அது மனதில் ஆழமாகப் பதிகிறது. அதன் அர்த்தம் புரிகிறது. அதை ஆட்சி செய்ய முடிகிறது. எந்த மொழியும் இதற்கு விதிவிலக்கல்ல. பிறமொழிகளின் ஆதிக்கம் தமிழ் மக்கள் வாழ்ந்த இடங்களுக்குள் வருவதற்கு முன்னரே தமிழில் ஒரு பழமொழி உண்டு. “சித்திரமும் கைப் பழக்கம் – செந் தமிழும் நாப் பழக்கம்”, என்பதே அந்தப் பழமொழி.

எனவே புதிய தமிழ்ச் சொற்களை நாம் பயில வேண்டும். அவற்றைத் தினமும் உபயோகிக்க வேண்டும். அப்போதுதான் கூச்சம் தெளியும். தமிழ் மொழிப் புலமை வளரும். தாழ்வு மனப்பான்மை விலகும். தன்னம்பிக்கை பெருகும். நமது மொழியின் பெருமையை நாமே உணர வாய்ப்பு எற்படும். எனவே, நாம் தமிழிலே பேசுவோம். தமிழ் நூல்களைத் தேடி வாசிப்போம்.

எமக்கும் எம் தாயகங்களுக்கும் பாலமாக இருப்பது நமது மொழிதான். இன்று எம் தாயகங்களில் ஒன்றான ஈழத்தில் தமிழர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகி உள்ளனர். தாயகத் தமிழர்களின் இன்னல்களைத் துடைக்க இன்றே உறுதி பூணுவோம்.

வணக்கம்.

**தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009**
**பேச்சுப்போட்டி - மேற்பிரிவு (பிறந்த திகதி: 01.07.1996 - 30.06.1999)**

# பொதுநலம் பேணல்

எந்த ஒரு சமூகத்தின் உறுப்பினருக்கும் அந்தச் சமூகத்தின் உணர்வு முக்கியம். அந்தச் சமூகத்தின் நிலையை என்றும் கவனிக்கும் பொறுப்பு அவசியம். இவை இன்றி நான், எனது, என்று எண்ணியவாறு வாழ்வது சுயநலம் நிறைந்தது. "எம் சமூக இன்னல்களில் இருந்து நான் தப்பிவிட்டேன்" என்ற நிலையில் இருந்து விலகி நாம் வாழ்கின்ற, எம்மை அடையாளப் படுத்துகின்ற சமூகத்தின் தேவைகளை அறிந்து வாழ்வது சிறந்தது.

இன்று, ஈழத்தில் நமது இனத்தவர்கள் தாம் பிறந்த மண்ணில் பல்வேறு வகையான இன்னல்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அரச பீடத்தில் உள்ளவர்கள் தவறான நடைமுறைகளைக் கைக்கொண்டு தம்மின மக்களையே ஏமாற்றுகிறார்கள்.

ஈழத்திலே தமிழ் மக்கள் தமது பாரம்பரியப் பெருமையுடனும், தன்மானத்துடன் வாழ்ந்தவர்கள். அதையே தம் அடையாளமாகக் காண்பதையும், அதை எந்த ஒரு நிலையிலும் விட்டுக் கொடுக்காத தன்மையையும் அவர்கள் பெருமையெனக் கருதினார்கள். வள்ளுவர் வாக்கைப்போல், "மயிர் ஒன்று நீங்கினாலும் உயிர் வாழாக் கவரிமானை" ஒத்தவர்களாக அவர்கள் வாழ்ந்தார்கள்.

இன்று தமக்கென இருந்த வீடுகளை இழந்து நிற்கின்றனர். தாம் பயிர் செய்து பலன் பெற்ற நிலங்களை இழந்து நிற்கின்றனர். இவர்களின் குடும்பங்கள் சிதறிச் சின்னா பின்னப் பட்டுள்ளன. தன் பழைய வீடு, தன் பழைய நிலம், தன் பழைய குடும்பம் என்பவை கனவாகி விட்டன. பழங்கதையாகி விட்டன. இத்தனையையும் இழந்தபோது ஒருவருக்குத் தமது தேவைகளுக்கே மற்றவரின் உதவி தேவைப்பட்டது.

தன் வீடு, தன் நிலம், தன் குடும்பம் என்று தன்னலத்துடன் வாழ்ந்துவிட்டு, அதிலிருந்து அடுத்த நிலையான பொது நலத்துக்குத் தம்மை உயர்த்தாததின் விளைவுகளை காலம் கடந்தே நாம் உணருகின்றோம். பொது நலத்தை நோக்கி அடி எடுத்து வைக்கும் பொழுது தன்னலத்தின் எதிர்விளைவுகளில் ஒன்றான பொறாமை கூட அற்றுவிடும். சமூக உணர்வு மேலோங்கும். சமூகமே உயரவும், உய்யவும் வழிவகுக்கும்.

வணக்கம்.

# தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2009
## பேச்சுப்போட்டி: அதிமேற்பிரிவு (பிறந்த திகதி: 01.07.1991 – 30.06.1996)

# எம்மால் முடியும்

உலகம் முழுவதும் இன்று பரந்து வாழ்கின்ற எம் இனம் இன்று பல இன்னல்களை எதிர் நோக்கியுள்ளது. நாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் எம் இனத்தவர் படும் இன்னல்களில் சிலவற்றை அந்நாட்டின் குடிமக்களும், அந்நாட்டில் வாழும் மற்ற இனத்தவர்களும்கூட எதிர் நோக்குகின்றனர். தம் குடிமக்களின் இயலாமையைத் தீர்ப்பதற்கு அந்நாட்டு அரசுகளும், அந்நாட்டில் உள்ள சமூக அமைப்புக்களும் வழிமுறைகளைத் தேடி ஆவன செய்கின்றன. இது மேற்குலக நாடுகளின் நிலை.

ஆனால், ஈழ மக்கள் படும் இன்னல்கள் பட்டியலிட முடியாத அளவுக்கு நீளமானது. சொல்லில் வடிக்க முடியாத அளவுக்குத் துயரமானது. தனது நிர்வாக வசதிக்காக ஈழ நாட்டைச் சிங்கள நாட்டுடன் இணைத்த பிரித்தானியா, இரு நாடுகளையும் ஒரே நாடாகச் சாசனமிட்டு 1948ம் ஆண்டு சுதந்திரம் வழங்கியபோது நாம் எமது நாட்டை இழந்தோம். அன்றே நாம் இரண்டாந்தரக் குடிமக்கள் ஆக்கப்பட்டோம். படிப்படியாகக் கொண்டுவரப்பட்ட சட்டங்களால் குடியுரிமை, நில உரிமை, தொழில் உரிமை, கல்வி உரிமை முதலிய நமது பிறப்புரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டன.

பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழர் இன்று ஒரு நேரக் கஞ்சிக்குக் கையேந்துகின்றனர். அவர்களுக்கு உதவ முடியாத நிலையில் நாம் உள்ளோம். அவர்களுடைய பட்டினிச் சாவுகளுக்கு எம் இயலாமையினால் நாமும் ஏதோ ஒருவகையில் காரணமாகின்றோம்.

வளமான வசதிகள் நிறைந்த கிராமங்களில் வாழ்ந்த ஈழ மக்கள் இன்று அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாத சேரி வாழ்க்கையை வாழ்கின்றனர். மருத்துவ வசதிகள் இன்றி நோய் வாய்ப்பட்டுத் தவிக்கின்றனர். வெட்டவெளி முகாம்களிலேயே அவர்களின் வாழ்வு முடிகிறது. கை, கால், போன்ற உறுப்புக்களை இழந்து அவர்களின் எதிர்காலமே கேள்விக் குறியாக இருக்கிறது. அவர்களுக்குத் தேவையான மருந்துகளைக் கூட அனுப்ப முடியாத நிலையை எண்ணி நாம் துடிக்கிறோம். அனுப்பினாலும் கிடைக்கப்பெறாத சூழ்நிலையில் அவர்கள் தவிக்கிறார்கள்.

ஈழத் தமிழரின் அவலங்களைக் களைவது உலகெங்கும் பரந்து வாழும் தமிழின மக்களின் கடமை. நம்மில் பலர் படித்தவர்கள். பலர் பணம் படைத்தவர்கள். வசதி நிறைந்தவர்கள். எல்லோரும் ஒன்றாக இணைவோம். எமது இனத்திற்கு உதவ வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்குண்டு. எம்மால் எம்மினத்தவருக்கு உதவக் கூடிய வழிகளை கண்டிறிவோம். தாயக மக்களின் துயர் துடைப்போம். அவர்களின் வளமான வாழ்வுக்கு வழி சமைப்போம்.

வணக்கம்.